செப்டம்பர் 15

மனன வசனம்

நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன். அப்போஸ்தலர் 26:29.

ஆராய்ச்சிக்கு

அப் 24; அப் 25; அப் 26; 1கொரி 1:23.

செப் 15 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 12

# சிசெரியாவில் சிறைவாசம்



சிசெரியா பட்டணத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட பவுல், தேசாதிபதி அதிகாரப்பூர்வமாகத் தங்குகிற ஏரோதின் அரண்மனையில் இரண்டு வருஷம் சிறைவாசம் அனுபவிக்கிறார். அப் 23:35; 24:27. அந்தக் காலக்கட்டத்தில் பவுல் பலமுறை விசாரிக்கப்பட்டார். பேலிக்ஸ், பெஸ்து எனும் இரண்டு தேசாதிபதிகளுக்கு முன்பாகவும், இரண்டாம் அகிரிப்பா எனும் ராஜாவுக்கு முன்பாகவும் ஆஜரானார். இப்படி, தேவன் அவருக்கு நியமித்திருந்த ஊழியத்தை நிறைவேற்றினார். அப் 9:15.

விசாரிக்கப்படும் சமயங்களில் எல்லாம், பவுல் தான் குற்றவாளி இல்லையெனக் கூறினார்; தன் குற்றத்தை நிரூபிக்க ஆதாரம் எதுவும் இல்லையென்றார்; அதுபோலவே, அவருக்கு எதிராக சாட்சிசொல்லவும் யாரும் இல்லை. கைதுசெய்யப்படுமளவிற்கு பவுல் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்பதும், அவர் ராயனுக்கு அபயமிடாதிருந்தால் விடுவிக்கப்பட்டிருப்பார் என்பதும் அச்சம்பவம் முழுவதிலும் வெளிப்படுகிறது. அப் 26:32 ஆனாலும், இயேசுவைப்பற்றியும், உயிர்த்தெழுதலின் வாக்குறுதியில் உள்ள மாபெரும் நம்பிக்கையைப்பற்றியும் சாட்சிகூறுவதற்கு அந்த விசாரணைகள் அருமையான வாய்ப்பாக அமைந்தன.

ஆனாலும், அப்போது கடுங்காவலில் அவர் அவதிப்பட்டார்; எருசலேம் சபை அவருக்கு எவ்வித ஆதரவும் காட்டவில்லை. ‘அங்கு நிலவிய தவறான அபிப்பிராயங்களுக்கு பவுல்தான் பெரும்பாலும் காரணமென்கிற உணர்வு அப்போதும்’ சபைத்தலைவர்களின் சிந்தைகளில் நீங்காமல் இருந்து வந்தது.

*2018, செப்டம்பர் 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## பேலிக்ஸிற்கு முன்னால்

பவுல் செசரியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு ஐந்து நாட்கள் ஆகியிருந்தன; பிரதான ஆசாரியன், சனகெரிம் சங்க உறுப்பினர்கள் சிலர், தெர்த்துல்லு எனும் வழக்கறிஞன் என யூதத்தலைவர்களில் முக்கியமானவர்கள் எருசலேமிலிருந்து செரியாவுக்குப் போய், அப்போஸ்தலனுக்கு எதிராக பேலிக்ஸிடம் முறைப்படி வழக்குப் பதிவுசெய்தார்கள். அப் 24:1-9.

இந்த வழக்கில் மட்டும்தான், குற்றஞ்சாட்டினவர்கள் ஒரு வழக்கறிஞனை அழைத்துவந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. தேசாதிபதியின் அனுதாபத்தைப் பெற தெர்த்துல்லு சாமர்த்தியமாகப் பேசுகிறான். பேலிக்ஸ் அளவிற்கு எந்தத் தேசாதிபதியும் அடக்குமுறையைக் கையாண்டதில்லை. பேலிக்ஸின் அடக்குமுறையால்தான் ரோம ஆட்சிக்கு எதிராக யூதர்கள் விரோதமடைந்திருந்தார்கள். பேலிக்ஸின் கொள்கையைச் சுட்டிக்காட்டி, இந்த வழக்கிலும் அரசியல் ஸ்திரதன்மையை நிலைநாட்டுவானென்று புத்திசாலித்தனமாகப் பேசுகிறான்.

பிறகு, பவுலுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறான்:

1. பவுல் ஒரு கலகக்காரன் என்றும், சாம்ராஜ்யம் முழுவதிலுமுள்ள யூதர்கள்மத்தியில் அமளியைத் தூண்டுவதாகவும் கூறுகிறான். அப் 24:5.
2. நசரேயக் குழுவின் தலைவன் என்கிறான்; அதாவது, கிறிஸ்தவ மார்க்கம் முழு வதையும் சிதைக்கிற இயக்கத்தின் தலைவன் என்கிறான். அப் 24:5.
3. எருசலேம் தேவா லயத்தை தீட்டுப்படுத்த முயன்றதாகச் சொல்கிறான். அப் 24:6.

**ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் பவுல் எவ்வாறு பதில் கூறுகிறார்? அப் 24:10–19.**

அவர்களுடைய வாதங்களைத் தகர்க்கும் விதத்தில் பவுல் இரண்டு விஷயங்களை முன்வைக்கிறார்.

1. தன்னைப் பார்த்ததாக அவர்கள் சொன்ன ஆசிய நாட்டவர்கள் அங்கு இல்லை. எனவே, அது ஒரு பொய் வழக்கு. அப் 24:18,19.
2. முந்தின வாரத்தில் பவுல் விசாரிக்கப்பட்டதுபற்றி மட்டும்தான் அந்த யூதர்கள் சொல்ல முடிந்தது; மரித்தோரின் உயிர்த் தெழுதல் குறித்து பவுல் நம்பினார் என்பது தவிர அவர் மேல் வேறு எந்தக் குற்றச்சாட்டும் அவர்களிடம் இல்லை. அப் 24:20; அப் 23:6.

பவுலின் வாதங்கள் உடனடியாக பேலிக்ஸிற்குப் புரிகின்றன; அவருடைய மனைவியான துருசில்லாள் ஒரு யூதஸ்திரி; எனவே கிறிஸ்தவ மார்க்கம்பற்றி பேலிக்ஸ் ஓரளவுக்குத் தெரிந்திருப்பார். அடுத்த அறிவிப்பு வரும்வரை வழக்கை ஒத்திவைக்கிறார். அப் 24:22.

பேலிக்ஸ் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நடந்துகொண்ட விதம் காட்டுகிறது. அப் 24:24-27. காலம் கடத்தினான்; லஞ்சத்தை எதிர்பார்த்தான்; சந்தர்ப்பவாதியாக இருந்தான். பேலிக்ஸ் போன்ற ஒருவரிடம் பவுலுக்கு நிச்சயமாக நியாயம் கிடைக்கப்போவதில்லை.

'தேவனுக்கும் மனுஷருக்கும்முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்' என்று பவுல் சொல்கிறார். அப் 24:16. அர்த்தம் புரிகிறதா? இதே போல நீங்களும் சொல்வதற்கு உங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது மாற்றம் தேவையா?

## பெஸ்துவிற்கு முன்னால்

யூதர்களுக்குத் தயவுசெய்வதற்காக இரண்டு வருடம் பவுலை பேலிக்ஸ் காவலில் வைத்திருந்தான்; பிறகு, பேலிக்ஸிற்குப் பதிலாக பொர்க்கியு பெஸ்து தேசாதிபதியாகிறார். அப் 24:27. கி.பி. 60-62 முதல் அவர் பதவிவகித்தார்.

**சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது, அதை நம்ப மறுக்கிறவர்களில் அது எவ்வளவுக்கு வெறுப்பை உண்டாக்குகிறது? அப் 25:1-5.**

பேலிக்ஸிடம் பவுல்மேலிருந்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்க யூதத்தலைவர்கள் ஒருமுறை தவறியிருந்தார்கள்; எனவே, மறுபடியும் அதே தவற்றைச் செய்ய விரும்பவில்லை. முதல்முறையாக பெஸ்து எருசலேமுக்குச் செல்கிறார்; அங்கே அவரிடம் பவுலை தங்களிடம் ஒப்படைக்கச் சொல்கிறார்கள்; அதாவது, யூதச்சட்டத்தின்படி சனகெரிம் சங்கத்தார் பவுலை விசாரிக்கும்படி, அந்த அதிகாரத்தை தங்களுக்குக் கொடுக்கச் சொல்கிறார்கள்.

பவுலைக் கொல்ல விரும்பினார்கள்; அதை மறைத்து நயவஞ்சகமாகப் பேசுகிறார்கள். மறுபடியும் வழக்கை விசாரிக்க பெஸ்து ஆயத்தமாக இருந்தார்; ஆனால், எருசலேமில் அல்ல, ரோமச் சட்டப்படி செசரியாவில் வைத்து விசாரிப்பதாகச் சொன்னார்.

செசரியாவுக்குச் சென்றதுமே பெஸ்து நியாயசங்கத்தைக் கூட்டுகிறார்; பவுலின் எதிரிகள் அவர்மேல் சராமாரியாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அப் 25:7. என்ன குற்றச்சாட்டுகள் என்று இம்முறை லூக்கா குறிப்பிடவில்லை. ஆனால் இரண்டு வருடங்களுக்குமுன் சொன்ன அதே குற்றச்சாட்டுகளைத்தான் சொல்லியிருப்பார்கள் என்பது பவுலின் பதிலிலிருந்து தெரிகிறது. அப் 25:8. ஆனால், இந்த முறை பவுலை ஒரு கலகக்காரன் என்று சொல்லியதோடு, இராயனுக்கு எதிராக அவர் சதிசெய்ததாகவும் குற்றஞ்சாட்டியிருக்க வேண்டும்.

**பெஸ்து தன்னை வைத்து அரசியல் விளையாட்டு விளையாடுவதை அறிந்ததும் பவுல் செய்தது என்ன? அப் 25:9-12.**

பேலிக்ஸின் அதே அரசியல் உத்திகள்தாம் பெஸ்துவிடமும் காணப்பட்டன. அப் 24:27. பவுலைக் குற்றமற்றவன் என்று தீர்ப்புச்சொல்லி, தன் நிர்வாகத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே யூதர்களின் ஆதரவை இழக்க அவர் விரும்பவில்லை. அதனால்தான் யூதர்கள் கேட்டுக்கொண்டது போல, பவுலை எருசலேமில் சனகெரிம் சங்கத்தாரே விசாரிக்கும்படி, முன்பு அவர்கள் தன்னிடம் வைத்த கோரிக்கையை நிறைவேற்ற மனதாயிருந்தான்.

பவுல் அதற்குச் சம்மதிக்கவில்லை; எதிரிகளின் மனவிருப்பத்துக்கு விடப்பட்டால், அவர்கள் தன்னை நியாயமாக நடத்தப்போவதில்லையென அறிந்திருந்தார். எனவே, ஒரு ரோமனாக தனக்கிருந்த உரிமைகளை வைத்து, ஒரு ரோம நியாயசங்கம்தான் தன்னை விசாரிக்க வேண்டுமென வலியுறுத்தினார். ஆபத்தான அந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிக்க வேறு வழியில்லை என்று அறிந்து, பேரரசர்தானே தன்னை விசாரிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்; அவர்தான் ரோம நீதி அமைப்பில் உயர்மட்ட அதிகாரி.

செவ்வாய், செப்டம்பர் 18

## அகிரிப்பாவுக்கு முன்னால்

பவுல் கேட்டுக்கொண்டபடி அவரை ரோமுக்கு அனுப்பிவைக்க பெஸ்து சம்மதிக்கிறார். அந்தச் சமயத்தில் இரண்டாம் அகிரிப்பா ராஜா செசரியாவுக்கு வருகிறார்; எனவே, பவுலின் வழக்கில் தான் பேரரசருக்கு அதிகாரப்பூர்வமாக அனுப்ப வேண்டிய அறிக்கையில் எத்தகைய தகவலைத் தெரிவிக்கவேண்டும் என்று அகிரிப்பாவிடம் ஆலோசனை கேட்க பெஸ்து விரும்புகிறார். அப்படிப் பட்ட உதவிசெய்ய அகிரிப்பாவுக்கு தகுதியிருந்தது. அப் 26:2,3.

**பவுலைப்பற்றி அகிரிப்பாவிடம் பெஸ்து சொன்னது என்ன? அதற்கு ராஜாவின் பதில் என்ன? அப் 25:13–22.**

---

இரண்டாம் அகிரிப்பா ராஜாதான் ஏரோதிய வம்சத்தில் கடைசியானவர்; அவர் தன் சகோதரியான பெர்னீக்கேயாளுடன் புதிய தேசாதிபதியை வாழ்த்தும்படி செசரியாவுக்கு வந்திருந்தார்.

பவுலின் வழக்குபற்றி பெஸ்து குறிப்பிடும்போது, அரசியல் அல்லது குற்றவியல் ரீதியாக மரண தண்டனைக்கு ஏதுவான எந்தக் குற்றத்தையும் பவுல் செய்யவில்லை என்கிறார். மாறாக, யூத மார்க்கத்திற்கடுத்த விஷயங்களிலும், 'இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்தும்' குற்றஞ்சாட்டினார்கள். அப் 25:19. ஏற்கனவே பவுல், இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்புவதாலேயே தான் விசாரிக்கப்படுவதாக சனகெரிம் சங்கத்திற்கு முன்பு தெரிவித்திருந்தார். அதுதான் உண்மையான காரணம் என்பதை இங்கு பெஸ்து தெளிவுப்படுத்துகிறார்.

**அகிரிப்பாவுக்கு முன்பாக பவுல் ஆஜரான காட்சியை லூக்கா எவ்வாறு விவரிக்கிறார்? அப் 25:23–27.**

---

''இப்போது பவுல் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையிலேயே அங்கு கூடியிருந்தவர்களுக்கு முன்பாக நின்றிருந்தார். முற்றிலும் எதிரான இரு காட்சிகள்! அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாளிடம் பதவியும் அதிகாரமும் இருந்தன; அதனால் உலகத்தார் அவர்களை பெரிதும் மதித்தார்கள். ஆனால் தேவனுடைய பார்வைக்குப் பிரியமான பண்புகள் அவர்களிடம் இல்லை. அவருடைய பிரமாணத்தை மீறுகிறவர்களாக, இருதயத்திலும் வாழ்க்கையிலும் சீர்கெட்டவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய நடவடிக்கையை பரலோகம் அருவருத்தது.'' - *EGW, AA, p 434.*

வெளிப்புற தோற்றத்தைப் பார்த்து மனிதர்கள் எடைபோடலாம்; ஆனால் அந்தத் தோற்றத்திற்கு பின்னால் மறைந்திருப்பது வஞ்சகமாக இருக்கலாம்; அதுபற்றி இந்தச் சம்பவம் சொல்வது என்ன? நம் வாழ்க்கை எப்படிப்பட்டதாக உள்ளது? நம் தோற்றம் வேறு, உண்மை வேறாக உள்ளதா?

# பவுலின் பிரதிவாதம்

நியாயசங்கத்தில் அரச விருந்தினர்களோடு தேசாதிபதியும் அமர்ந்திருக்கிறார்; தன் பக்கத்திலுள்ள நியாயத்தைச் சொல்லுவதற்காக சிறைக்கைதியும் வரவழைக்கப்படுகிறார்; அந்தப் பிரதிவாதத்தை பெஸ்து ஏற்கனவே கேட்டிருந்தார்; இப்போது முக்கியமாக அகிரிப்பாவுக்காக இந்த ஏற்பாடு. அப் 25:8-11.

**அகிரிப்பாவுக்குமுன்பாக பவுல் என்ன பேசினார்? அப் 26:1-23.**

மனமாற்றத்திற்கு முன்னரும் பின்னரும் உள்ள தன் சுயசரிதையை பவுல் கூறினார். ஒரு சமயம், எருசலேமில் கூடியிருந்தவர்களுக்கு முன்னால் நின்று சொன்ன அதே விஷயங்களைத்தாம் இங்கு மீண்டும் கூறுகிறார். அப் 22:1-21.

முதலில் அகிரிப்பாவுக்கு தன்மேல் நல்லெண்ணத்தை உண்டாக்க முயல்கிறார். அகிரிப்பா போன்ற ஒரு உயர்மட்ட நபருக்கு முன்னால் தன்னுடைய வழக்கைச் சொல்ல வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றிகூறுகிறார். ஏனென்றால், யூதமார்க்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா பழக்கவழக்கங்களையும் விஷயங்களையும் அகிரிப்பா அறிந்திருந்தார். அதனால்தான் பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்த முகாந்தரமும் இல்லை என்பதையும் அவை பொய்யானவை என்பதையும் ரோம தேசாதிபதிக்கு அவர் புரியவைக்க முடிந்தது.

பவுலின் பேச்சை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதியில், ஒரு பரிசேயனாக தனக்கிருந்த பக்தியை விவரிக்கிறார். அப் 26:4-11. அன்றைக்கு எருசலேமிருந்த அனைவருக்கும் அது தெரியும். ஒரு பரிசேயனாக, மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பினார்; இஸ்ரவேலின் முற்பிதாக்களும் அத்தகைய நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே பவுல் பிரசங்கித்த செய்தி யூதமார்க்கத்திற்கு விரோதமானது அல்ல; யூதர்கள்தான் அதைப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், யூதர்களின் மனநிலையை பவுல் புரிந்துகொள்ள முடிந்தது. ஏனென்றால், இயேசுவை தேவன் எழுப்பியிருக்க வாய்ப்பே இல்லையென்று முன்னர் பவுல்தானே முற்றிலும் நம்பினார்; இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பினவர்களை அவர்தானே உபத்திரவப்படுத்தினார்.

இரண்டாம் பகுதியில், தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசுவைச் சந்தித்தது தன் மனதை மாற்றியதையும், புறஜாதியாருக்கு நற்செய்தியை அறிவிப்பதற்கான அழைப்புக்கு தான் இணங்கினதையும் கூறுகிறார். அப் 26:12-18.

அந்தத் தரிசனத்தால், கீழ்ப்படிவதைத் தவிர தனக்கு வேறு வழியே இல்லாமல் போனதையும், ஊழியப்பணியைச் செய்ததையும், அதனாலேயே இப்போது சிறைக்கைதியாக நிற்பதையும் கூறுகிறார். அப் 26:19-23. யூதப்பிரமாணத்தை மீறினதற்காக, தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியதற்காக அவர் கைதுசெய்யப்படவில்லை. மாறாக, இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்துப் பிரசங்கித்ததாலேயே கைதுசெய்யப்பட்டார். ஆனால் அவருடைய செய்தி முற்றிலும் வேதத்திற்கு இசைந்திருந்தது; விசுவாசிகளான புறஜாதியாரும் இரட்சிப்பில் பங்கடையலாம் என்பதை வலியுறுத்தியது.

கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பைப் பெறுகிறவர்களுக்கு என்ன கிடைக்கிறது? அப் **26:18.** இந்த நிஜத்தை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா?

## வியாழன், செப்டம்பர் 20

# தலைவர்களுக்குமுன்னால் பவுல்

அகிரிப்பாவிடம்தான் பவுல் பேசுகிறார்; ஆனால் முதல் பதில் பெஸ்து விடமிருந்து வருகிறது. அப் 26:24. ஆத்துமாவுக்கு அழிவில்லை என்று பவுல் சொல்லியிருந்தால் பெஸ்து அமைதியாக இருந்திருப்பார். ஆத்துமா அழிவில் லாமை-உயிர்த்தெழுதல், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாத கருத் துகள் என்று முற்கால கிரேக்க-ரோமர்களுக்குத் தெரியும். அதனால்தான் ஆத்துமா அழிவில்லாதது என்பதை ஏற்றுக்கொண்டு, உயிர்த்தெழுதலை மறுத் தார்கள். நற்செய்தி கிரேக்கருக்குப் பைத்தியமாயிருக்கிறது என்று பவுல் சொல் வதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. 1கொரி 1:23.

தான் சொல்வதெல்லாம் சத்தியம் என்று மரியாதையுடன் பவுல் தெரிவித்து விட்டு, அகிரிப்பாவிடம் திரும்புகிறார். எபிரெய தீர்க்கதரிசிகள் சொல்லியிருப் பதைத்தான் பவுல் பேசுகிறாரென்பது அகிரிப்பாவுக்கு நன்றாகத் தெரியும். அப் 26:25,26.

**பவுலின் அழுத்தமான கேள்விக்கு அகிரிப்பாவின் பதில் என்ன? அப் 26:27,28.**

பவுலின் கேள்வி அகிரிப்பாவை ஒரு கணம் திகைக்கச் செய்தது. ஒரு யூதனாக, வேத வாக்கியங்களை தான் நம்பவில்லை என்று அவர் சொல்லமுடி யாது; மறுபுறம், தான் நம்புவதாகச் சொன்னால், இயேசுவை மேசியா என்று ஒத் துக்கொள்ள வேண்டும். எனவே, அந்தப் பகுத்தறிவு வாதக் கண்ணியிலிருந்து சாதுரியமாகத் தப்புகிறார்: 'நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச்சம்மதிக்கப்பண்ணுகிறாய்.' அப்26:28. 'நான் ஒருகிறிஸ்தவனாவதற்கு இவ்வளவு சீக்கிரத்தில் என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாயா?' என்றுதான் கிரேக்க புதிய ஏற்பாட்டில் இந்த வசனம் சொல்லப்படுகிறது.

அதற்கு பவுல் சொன்ன பதில், நற்செய்தியில் அவருக்கிருந்த அர்ப்பணிப் பைக் காட்டுகிறது: 'நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவ ரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என் னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.' அப் 26:29. அங்கு நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள்போல தானும் சுதந்திரவானாக இருக்க, தன்னை விடுவிக்கும்படி பவுல் கேட்கவில்லை. மாறாக, சங்கிலியால் கட்டப் படுவதைத் தவிர மற்றப்படி அவர்கள் தன்னைப்போல மாறவேண்டும் என்று கூறுகிறார். தன் சொந்த பாதுகாப்பைக்கூட மறுக்கும் அளவுக்கு தன் ஊழியப் பணியில் அதிக தீவிரத்துடன் இருந்தார்.

**பவுல் குற்றமற்றவரென தான் நம்புவதாக அகிரிப்பா எவ்வாறு தெரிவிக்கிறார்? அப் 26:30–32.**

அறிக்கை சமர்ப்பிக்க உதவும்படி அகிரிப்பாவிடம் பெஸ்து கேட்டிருந் தார். அப் 25:25-27. பவுல் கேட்டபடி அவரை ராயனிடம் அனுப்ப சம்மதித்தும் இருந்தார். அப் 25:12. எனவே, தேசாதிபதியால் எதுவும் செய்யமுடியாது.

பவுலின் இறுதி வேண்டுகோள் என்ன? அப் **26:24–28.** விசுவாசம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நம்முடைய இறுதி அதிகாரம் எதுவாக இருக்கவேண்டும்?

## மேலும் படிக்க:

'பவுலின் வார்த்தைகளைக் கேட்டதும் அகிரிப்பா தன் கடந்தகால குடும்ப வரலாற்றையும், பவுல் பிரசங்கிக்கிற இயேசுவுக்கு எதிராக எடுக்கப்பட்ட முயற்சிகள் வீணாய்ப் போனதையும் நினைத்திருப்பாரா? தன் பெரிய தாத்தா ஏரோது ஒன்றுமறியாத குழந்தைகளைப் படுகொலைசெய்ததை நினைத்திருப்பாரா? தன் பெரியப்பா அந்திபாஸ் என்பவர் யோவான் ஸ்நானனைக் கொன்றதை நினைத்திருப்பாரா? தன் அப்பா முதலாம் அகிரிப்பா அப்போஸ்தலனாகிய யாக்கோபைக் கொன்றதை நினைத்திருப்பாரா? தேவ ஊழியர்களுக்கு எதிராக அவர்கள் செய்த குற்றங்களின் விளைவாகவே அவர்களுக்கு சடுதியில் அழிவு நேரிட்டதென்பதை நினைத்திருப்பாரா? அன்று அவர் பகட்டோடும் ஆடம்பரத்தோடும் நின்றிருந்தது, அவரைவிட வலிமைவாய்ந்த அரசானான அகிரிப்பா, அதே நகரத்தில் மினுக்கான வஸ்திரங்களோடு நின்றபோது, அவர் தேவனைப்போல இருப்பதாக மக்கள் ஆரவாரம் செய்ததை நினைத்திருப்பாரா? மக்களின் ஆராவாரம் அடங்குவதற்குமுன்பே, சடுதியில் உண்டான தேவகோபத்தால் அகங்காரமிக்க அந்த ராஜா செத்துப் போனதை மறந்துபோனாரோ? இவை எல்லாமே அகிரிப்பாவின் நினைவில் எட்டிப் பார்த்தன; ஆனால் தனக்குமுன் காணப்பட்ட அற்புதகாட்சி, மாயைக்குத் தூபமிட்டது; உன்னதமான அந்த எண்ணங்களை அகந்தையும் சுயமுக்கியத்துவமும் போக்கடித்தன.' - *EGW, 6SDABC, p 1066,1067.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இராயனுக்கு அபயமிட பவுல் தீர்மானித்தது சரியான முடிவா? அப் 25:25; 26:31,32. முற்றிலும் தேவ கிருபையைச் சார்ந்திருப்பதற்குபதிலாக நம்மைப் பாதுகாக்க சட்டப்பூர்வ உத்திகளைக் கையாள்வதை எவ்வளவு தூரம் நாம் அனுமதிக்கலாம்?*

2. *'ஆகையால், அகிரிப்பா ராஜாவே நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை' என்று அகிரிப்பாவிடம் பவுல் கூறுகிறார். அப் 26:19. பவுலைப்பற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது? கிறிஸ்தவர்களாக ஊழியப்பணியைச் செய்ய எவ்வளவுக்கு உண்மையோடு இருக்கிறோம்? 1பேதுரு 2:9.10.*

3. *மக்கள்மேல் அன்புள்ளவர் பவுல். செசரியாவில் தான் இறுதியாக விசாரிக்கப்பட்டபோது, அங்கு கூடியிருந்தவர்களிடம் எல்லாருமே என்னைப் போலாக விரும்புகிறேன் என்றார். அதாவது, தேவகிருபையால் இரட்சிக்கப்பட விரும்புவதாகச் சொன்னார். அப் 26:29. தான் விடுவிக்கப்படுவது முக்கியமல்ல, மக்கள் தேவனுடைய இரட்சிப்பைக் கண்டுகொள்வதுதான் முக்கியமென்றார். அவரிடமிருந்து நாம் என்ன பாடம் கற்றுக்கொள்ளலாம்? நற்செய்தியை அறிவிப்பதற்காக நம்மையே தியாகம்செய்ய எவ்வளவு தூரம் ஆயத்தமாக இருக்கிறோம்?*

4. *பவுலிடம் நற்செய்தியை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அகிரிப்பாவுக்குக் கிடைத்தது. ஆனால், புறக்கணித்து விட்டார். தேவன் மிகப்பெரிய வாய்ப்புகளை நமக்குத் தரும்போது அவற்றை இழக்காதிருக்க என்ன செய்யலாம்? நம் வாழ்க்கையில் நேரிடும் நிகழ்வுகளை ஆவிக்குரிய கண்ணால் பார்க்க, எவ்வாறு எப்போதுமே ஆயத்தமாக இருக்கலாம்?*